**செ.வெ.எண்: 07** **நாள்:02.10.2019**

# அரியலூர் மாவட்டம்

## வாக்காளர் சரிபார்ப்புத் திட்டம் 15.10.2019 வரை நீடிக்கப்பட்டுள்ள - மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய், இஆப., அவர்கள் தகவல்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி வாக்காளர்கள், தாங்களாகவே தங்களது விபரங்களை வாக்காளர் பட்டியலில் சரிபார்த்திடும் பொருட்டு, **வாக்காளர் சரிபார்ப்புத் திட்டம்** (Electors Verification Programme) என்ற புதிய திட்டம், 01.09.2019 முதல் 30.09.2019 முடிய நடைமுறையில் இருந்தது. தற்போது, இந்த திட்டமானது **15.10.2019** வரை இந்திய தேர்தல் ஆணையத்தால் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் அனைத்து வாக்காளர்களும், தங்களது பெயர், வயது, உறவினர் பெயர், பாலினம், முகவரி மற்றும் புகைப்படம் போன்றவற்றினை சரிபார்ப்பு / திருத்தம் மேற்கொள்ளுதல், குடும்ப உறுப்பினர்களின் விபரங்களை சரிபார்த்தல் மற்றும் ஒருங்கிணைத்தல், விடுபட்ட / பதிவுசெய்யாத வாக்காளர்களை சேர்த்தல், வாக்குச்சாவடி தொடர்பான கருத்துக்கள் குறிப்பிடுதல் போன்ற பணிகளை, தேசிய வாக்காளர்கள் சேவை இணைய வாயில் (www.nvsp.in), வாக்காளர் உதவி மையம்- கைப்பேசிச்செயலி ('Voter Helpline" Mobile App, பொது சேவை மையங்கள் (CSC), வருவாய் கோட்டாட்சியர் அலுவலங்களில் செயல்படும் வாக்காளர் வசதி மையங்கள் (VFC), வாக்காளர் உதவி மையம் - கட்டணமில்லா தொலைபேசி எண்1950 போன்ற இணையம் / கைப்பேசி செயலி வாயிலாகவும் மற்றும் சேவை மையங்கள் வாயிலாகவும் பயன்படுத்தி தாங்களாகவே மேற்கொள்ளலாம்.

மேலும், இத்திட்டத்தின்கீழ் வாக்காளர்கள், தங்களது விபரங்களை சரிபார்ப்பு செய்யவும் திருத்தங்கள் செய்திடவும் கீழ்கண்ட ஏதேனும் ஒரு ஆவணத்தினை கட்டாயமாக பதிவேற்றம் / சமர்ப்பிப்பு செய்திட வேண்டும்.

பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம், ஆதார் எண், குடும்ப அட்டை, அரசு அடையாள அட்டை, வங்கி கணக்கு புத்தகம், உழவர் அடையாள அட்டை, பான் அட்டை, மக்கள் தொகை பதிவேட்டின் இந்திய பொது பதிவாளரால் வழங்கப்பட்ட நேர்த்தி அட்டை, வாக்காளர் அல்லது அவரது நெருங்கிய உறவினர் பெயரில் (அதாவது பெற்றோர் மற்றும் பிற) உள்ள, சமீபத்திய தண்ணீர் / தொலைபேசி / மின்சாரம் / எரிவாயு இணைப்புக்கான கட்டண ரசீதுகள்

எனவே, அனைத்து வாக்காளர்களும், இத்திட்டத்தின்மூலம், தங்களது விபரங்களை சரிபார்த்துக்கொள்ளுமாறும், 100% குறைபாடற்ற வாக்காளர் பட்டியல் தயார் செய்வதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறும் அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**